# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க,
# பிணையங்கள் பேரவை (திருத்தச்) சட்டம்

*[1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 5 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1991 ஆம் ஆண்டு யூலை 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 2.70 தபாற் செலவு ரூபா: 3.10

## 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பிணையங்கள் பேரவை (திருத்தச்) சட்டம்

[1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச.வ.—ஓ 62/89

**1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பேரவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பிணையங்கள் பேரவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பேரவைச் சட்டத்தின் விரிவுப்பெயர், "இலங்கையின் பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக பிணையங்கள் பேரவையைத் தாபிப்பதற்கும்; பிணையங்களில் வர்த்தகஞ்செய்தல் என்னும் தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குத்தொகுதித் தரகர்களுக்கும் பங்குத்தொகுதி வியாபாரிகளுக்கும் பங்குத்தொகுதி பரிவர்த்தனை நிலையங்களுக்குமான உரிமம் வழங்குவதற்கும்;" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; பிணையங்களில் வர்த்தகஞ்செய்கின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை நிலையங்களுக்கும், கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களுக்கும், பங்குத்தொகுதித் தரகர்களுக்கும் அத்துடன் பங்குத்தொகுதி வியாபாரிகளுக்கும் உரிமம் வழங்குவதற்கும்;" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"பிணையங்கள் பேரவைச் சட்டம்", "பிணையங்கள் பேரவை", "பேரவை" என்பன, "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்", "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு", "ஆணைக்குழு" என அறியப் படுதல் வேண்டும்.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும்-

(அ) "பிணையங்கள் பேரவைச் சட்டம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்" என்ற சொற்களும்;

(ஆ) "பிணையங்கள் பேரவை" அத்துடன் பிணையங்கள் பேரவையைக் குறிக்கும் "பேரவை" என்ற சொற்களுக்குப் பதிலாக முறையே "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" அத்துடன் "ஆணைக்குழு" என்ற சொற்களும்,

பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், கடிதத் தொடர்பில் அல்லது வேறு ஆவணத்தில் "பிணையங்கள் பேரவைச் சட்டம்" அத்துடன் "பிணையங்கள் பேரவை" என்பது பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், முறையே "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுச் சட்டம்" அத்துடன் "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது பற்றிய குறிப்பீடொன்றாக வாசிக்கப்படுதலும் அத்துடன் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அவர் பதவிதுறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அவர் பதவி துறப்பதன்மூலம், பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது செயற்பாட்டின்மூலம்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(5) ஆணைக்குழுவிடமிருந்து முன் அனுமதிபெறாமல், ஆணைக்குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "அவ்வுறுப்பினர்களுள் ஒருவரை அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கவெனத்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அவ்வுறுப்பினர்களுள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்கவெனத்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) ஆணைக்குழுவின் இலச்சினையானது, ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரினதும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் முன்னிலையிலன்றி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி சமுகமாயில்லாதவிடத்து ஆணைக்குழுவின் எவரேனும் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) முதலீட்டாளர்களின் அக்கறைகளைப் பாதுகாத்தல்;"

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பைச் செயற்படுத்துவதற்கென முகாமைக் கம்பெனியொன்றுக்கு உரிமம் வழங்குதலும், அத்தகைய கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அலுவல்கள் தகுந்தமுறையில் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதலும்;";

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(இ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றுக்கு அல்லது உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைக் கம்பெனிக்கு அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு, காலத்துக்குக்காலம் பணிப்புக்களை வழங்குதல்;";

(3) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஏ) முதலீட்டாளர்களின் பாதுகாப்புக்கென, எவையேனும் பிணையங்களின் நிரற்படுத்தலை, அல்லது தரப்பட்டுள்ள எவையேனும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் வியாபாரத்தை இல்லாதாக்குதல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது ஒரு தடவையில் மூன்று நாட்களுக்கு மேற்படாமல் நிரற்படுத்தப்பட்ட எல்லாப் பிணையங்களினதும் வியாபாரத்தை இடைநிறுத்துதல்;";

(5) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் "பங்குத்தொகுதி வியாபாரியின் அத்துடன் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பங்குத்தொகுதி வியாபாரியின், கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அத்துடன் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(6) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் "பங்குத்தொகுதி வியாபாரி அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி தரகர் எவராலும் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி எதனாலும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "உரிமம்பெற்ற பங்குத்தொகுதி வியாபாரி, உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றினது நம்பிக்கைப்பொறுப்பாளர் எவரினாலும் அல்லது முகாமைக் கம்பெனி எதனாலும் அல்லது உரிமம்பெற்ற பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி எதனாலும்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(7) அப்பிரிவின் (க) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

"(க) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 227 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய தனியார் கம்பெனியொன்றை வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய பகிரங்கக் கம்பெனியொன்றாக ஆகுமாறு கோருவதற்குக் கம்பெனிகள் பதிவாளருக்கு வேண்டுகோள் விடுத்தல்; அத்துடன்

(ங) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு இடைநேர்விளைவாகக்கூடியவாறான அல்லது உகந்தவையாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்கள் யாவற்றையும் புரிதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:—

"(அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகள், பங்குத்தொகுதித் தரகர்கள், பங்குத்தொகுதி வியாபாரிகள், அத்துடன் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கள் என்பன, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கச் செயற்படுகின்றனவா அல்லது செயற்படுகின்றனராவென்பதைத் தீர்மானிப்பதற்கென அவற்றின் அல்லது அவர்களின் செயற்பாடுகள் பற்றிய நுண்ணாய்வுகளை நடாத்துவதில் உறப்பட்ட செலவுத்தொகைகளை, செயற்பாடுகள் சோதனையிடப்படுகின்ற உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையிடமிருந்து, பங்குத்தொகுதித் தரகரிடமிருந்து, பங்குத்தொகுதி வியாபாரியிடமிருந்து அல்லது கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைக் கம்பெனியிடமிருந்து அறவிடுதலும்;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "உரிமம்பெற்ற பங்குத்தொகுதித் தரகர்களையும் பங்குத்தொகுதி வியாபாரிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகளையும், பங்குத்தொகுதித் தரகர்களையும், பங்குத்தொகுதி வியாபாரிகளையும்; அத்துடன் உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களின் முகாமைக் கம்பெனிகளையும்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(இ) உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைக் கம்பெனியை, ஒவ்வோராண்டு தொடர்பிலும் அந்த ஆண்டுக்கான அக்கூறு நம்பிக்கைப்பொறுப்பின் செயற்பாடு

களப்பற்றி ஆகக்குறைந்தது இரு அறிக்கைகளையாவது ஆணைக்குழுவிடம் கோப்பிடும்படி தேவைப்படுத்துதல். அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். முதலாவது அறிக்கை அவ்வாண்டின் செத்தெம்பர் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல் கோப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இரண்டாவது அறிக்கை அடுத்துப்பின்வரும் ஆண்டின் மாச்சு முப்பத்தோராம் நாளுக்குப் பிந்தாமல் கோப்பிடப்படுதலும் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவு, "இதற்கான அட்டவணையின் III ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இதற்கான அட்டவணையின் III ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 18 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், அது அச்சட்டத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

**"பிழையான அல்லது பொய்யான தகவலைக் கொடுத்தல்.**

18அ. (1) பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத் தொகுதி வியாபாரிக்கு, அடுத்துப்பின்னர் பிழையானவை அல்லது பொய்யானவை எனக் காணப்பட்டவையும், அத்தகைய பங்குத்தொகுதித் தரகரினால் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியினால் கொடுக்கப்பட்டவையுமான விபரங்களின் அடிப்படையில் உரிமமொன்று வழங்கப்பட்டிருக்குமிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு வழங்கப்பட்ட உரிமத்தைக் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு இடைநிறுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு, இடைநிறுத்தற் காலப்பகுதி முடிவில் அல்லது அதற்கு முன்னர் சரியான விபரங்களைக் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்தலும் வேண்டும். ஆணைக்குழுவானது, விபரங்களைப் பெற்றதன்மேலும்; அத்துடன் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்ததன் பின்னரும் இடைநிறுத்தற் கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒரு வேண்டுகோளுக்கிணங்கியொழுகி அவ்வுட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் விபரங்கள் கொடுக்கப்படாதவிடத்து அல்லது கொடுக்கப்பட்ட பட்ட விபரங்களைச் சீர்தூக்கிப் பார்த்ததன்மேல் இடைநிறுத்தற் கட்டளை இல்லாதொழிக்கப்படலாகாதென ஆணைக்குழுவானது தீர்மானிக்குமிடத்து, அது உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(1) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்று, உரிமம் முடிவுறுவதற்குமுன்னர் உள்ள ஆறு மாதங்களினுள் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கென, விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "உரிமம் ஒன்று இல்லாதாக்கப்படுமுன்னர்," என்னும் சொற்களுக்கும் "ஏன் இல்லாதாக்கப்படலாகாது" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "உரிமம் ஒன்று இல்லாதாக்கப்படுவதற்கு முன்னர் அல்லது இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர்," என்னும் சொற்களையும் "ஏன் இல்லாதாக்கப்படலாகாது அல்லது இடைநிறுத்தப்படுதலாகாது" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(4) உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத் தொகுதி வியாபாரி ஒருவர், (1)ஆம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது (ஆ) அல்லது (இ) அல்லது (ஈ) என்பதன் ஏற்பாடுகளை மீறியுள்ளார் எனவும், அத்துடன் அத்தகைய மீறுகையானது பாரதூரமான ஓர் இயல்பினதாக இல்லையெனவும் ஆணைக்குழு திருப்தியுறுமிடத்து, அது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் செயற்படுவதற்குப் பதிலாக,

(அ) அத்தகைய மீறுகையினின்று விளையும் நிலைமையைத் திருத்துவதற்கு அல்லது சீர்ப்படுத்துவதற்கு; அல்லது

(ஆ) இச் சட்டத்தின், அல்லது இச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அல்லது அத்தகைய மீறுகையைத் தொடர்ந்து செய்வதனைத் தவிர்ப்பதற்கு,

தோதானதென ஆணைக்குழு கருதக்கூடிய எத்தகையதுமான நடவடிக்கையை எடுக்குமாறு அத்தகைய உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தரகரை அல்லது பங்குத்தொகுதி வியாபாரியைப் பணிக்கலாம்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தரகரொருவருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரியொருவருக்கு பணிப்பொன்று வழங்கப்படுதலானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக அத்தகைய உரிமம்

பெற்ற பங்குத்தொகுதித் தாகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கெதிராக வழக்கொன்று தொடுக்கப்படுவதையோ அல்லது பேணப்படுவதையோ, பாதித்தலோ அல்லது பங்கப் படுத்துதலோ ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "21ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "18அ அத்துடன் 21 என்னும் பிரிவுகளின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு "வெளிநிலுவையாக வுள்ள ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்பதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வெளிநிலுவையாகவுள்ள பிணையங்களிலான கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்பதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 23அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"உரிமம் பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்றல்.

23அ. (1) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் நிருவாகமும் முகாமையும் பொறுப்பேற்கப்படவேண்டும் என பொதுமக்கள் நலன் தேவைப்படுத்துகின்றதென ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து, அது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்கலாம். ஆணைக்குழு, கசெற்றில் வெளியிடப்படும் அடுத்துறும் அறிவித்தலொன்றின்மூலம் முதலாவது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை நீடிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு அறிவித்தலினதும் பிரதியொன்றைக் கம்பெனிகள் பதிவாளருக்கு அனுப்பிவைக்கச் செய்வித்தலும் வேண்டும். அவர் அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைத் தொழிற்படுத்தும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமம் பெற்ற கம்பெனி தொடர்பிலான பதிவேடுகளில் அதனைப் பற்றிய குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்குமிடத்து அத்தகைய பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரலிடப்பட்ட கம்பெனிகளின் முதலீட்டாளர்களின் அக்கறைகளைக் கருத்திற்

கொண்டு அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் முகாமைப்பணிக்கென எவரேனும் ஆளுடன், ஆணைக்குழுவுக்கும் அத்தகைய ஆளுக்குமிடையே உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளலாம்.

(3) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் ஆணைக்குழு பொறுப்பேற்குமிடத்து ஆணைக்குழு, அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழு எவரேனும் ஆளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் விடயத்தில் அந்த ஆள்—

(அ) அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றுக்கு அல்லது அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைத் தொழிற்படுத்தும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமம் பெற்ற கம்பெனியின் அமைப்பு அவ்விதிகளினால் அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அல்லது புரியலாம்; அத்துடன் ஆணைக்குழுவால் அல்லது அத்தகைய ஆளினால் அத்தகைய பிரயோகம் நிறைவேற்றுகை; அத்துடன் புரிகை ஒவ்வொன்றும், அது அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பிரயோகம், நிறைவேற்றுகை, அல்லது புரிகையொன்று என்றாற்போன்று செல்லுப்படியாதலும் பயனுறுதியுடையதாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட அறிவித்தலானது வெளியிடப்பட்டதேதிக்கு முந்திய நாளன்று, அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைத்தொழிற்படுத்தும் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையால் பயன்படுத்தப்பட்டதான ஏதேனும் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, அத்தகைய நோக்கத்திற்கென உடைமைகொள்ளலாம் என்பதுடன், பயனும்படுத்தலாம்.

(4) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றின் நிருவாகமும் முகாமையும் எக்காலப்பகுதிக் கெனப் பொறுப்பேற்கப்பட்டுள்ளதோ அக்காலப் பகுதியின்போது அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவரும், அவ்வாறு செய்வதற்கு ஆணைக்குழுவால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டாலன்றி, அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அல்லது அத்தகைய பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையைத் தொழிற்படுத்தும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமம்பெற்ற கம்பெனியின் அமைப்பு அகவிதிகளினால் அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி பிரயோகிக்கப்படுவதை, நிறைவேற்றப்படுவதை அல்லது புரியப்படுவதை இல்லாதொழித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழு, (1)ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில், அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் விதிகளுக்கிணங்க அதன் பணிப்பாளர் சபையைப் புனரமைத்துருவாக்குமாறு உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றுக்கு அழைப்பு விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய புனரமைத்துருவாக்கலின் பின்னரும் அத்துடன் அத்தகைய காலப் பகுதி முடிவடைந்ததன்பேரிலும் (3)ஆம் உட்பிரிவின் கீழ் உடைமைகொள்ளப்பட்ட ஆதனத்தைப் புனரமைத்துருவாக்கப்பட்ட பணிப்பாளர் சபையிடம் கையளித்தலும் வேண்டும்."

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "மாற்றுதல் மூலமான அல்லது அதனோடு எதனையும் சேர்ப்பதன் மூலமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாற்றுதல் மூலமான அல்லது அதனோடு எதனையும் சேர்ப்பதன் மூலமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :—

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(5) இப்பிரிவின் (3)ஆம் (4)ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவால் அதன் பொருட்டு ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதியினவான பங்குத்தொகுதிப் பரிவர்த்

தனையொன்றின் விதிகளுக்கான திருத்தங்கள் அத்தகைய திருத்தம் பயனுறுகின்ற இருபத்தொரு நாட்களுக்குள் ஆணைக்குழுவானது; அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய திருத்தத்தை மறுக்கலாம் என்ற நிபந்தனைக்கும்; அத்துடன் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைத் தேவைப்படுத்தலாம் என்ற நிபந்தனைகளுக்கும் அமைய, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்பட்டதன்மேல் உடனடியாகப் பயனுக்கு வருதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவு என மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவால் அதன்பொருட்டு ஆக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வகுதிகளிலான ஏதேனும் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் ஆணைக்குழுவிற்கு அத்தகைய மாற்றத்தை அல்லது திருத்தத்தைப் பற்றி அறிவிக்கப்படுவதன்மீது உடனடியாகப் பயனுறுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவைத் திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்," என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் கொள்வனவு, விற்பனை முதலியன.

28. (1) (அ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் பங்குகள் வைத்திருக்கும் ஆளெவரும் ஆணைக்குழுவின் முன் அங்கிகாரமின்றி, அத்தகைய உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வியாபார நடவடிக்கை முறைக்கு இணக்கமாகவன்றி அத்தகைய பங்குகளை வாங்குதல், விற்பனைசெய்தல், கொடையாக அளித்தல் அல்லது வேறுவகையில் கையாளுதல் ஆகாது:-

ஆயின், ஆளொருவர், உத்தேசக் கொடை தொடர்பிலான விவரங்களைப்பற்றி ஆணைக்குழுவுக்கும்; அத்துடன் உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கும் முன்னறிவித்தல் கொடுப்பாராயின், அத்தகைய வியாபார நடவடிக்கைமுறைக்கு இணங்கியொழுகுவதாய் இல்லாத வேறு வகையில் அத்தகைய ஏதேனும் பங்கை உறவினர் ஒருவருக்குக் கொடையாக அளிக்கலாம்;

(ஆ) உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றில் உள்ள பங்குகள் எவையும், அத்தகைய பங்குகளை வைத்திருப்பவரின் இறப்பின்மேல் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி, வேறெவரேனுமாளின் பெயரில் பதியப்படுதல் ஆகாது.

இவ்வுட்பிரிவில் "உறவினர்" என்பது ஆளொருவர் தொடர்பில் அவ்வாளின் ஒரு பெற்றோர், வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளை அல்லது அவ்வாளின் ஒரு பிள்ளையினுடைய வாழ்க்கைத் துணை என்று பொருள்படும்.

(2) உரிமம் பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை எதுவும் அல்லது பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத் தொகுதி வியாபாரி எவரும் எவையேனும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் கொள்வனவு விற்பனை அல்லது வேறு வகையான கையாளுகை தொடர்பில் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது மறைமுகமாகவாயினுஞ்சரி—

(அ) எவரேனும் ஆளை மோசடி செய்யும் நோக்கத்துடன் ஏதேனும் உபாயத்தை அல்லது சாதனத்தைப் பயன்படுத்துதல்;

(ஆ) எவரேனும் ஆள்மீது மோசடியொன்றை அல்லது வஞ்சகத்தைச் செயற்படுத்துவதான ஏதேனும் வழக்கத்தில் அல்லது தொழில் நெறிமுறையில் ஈடுபடுதல்; அல்லது

(இ) முக்கிய நிகழ்வொன்று தொடர்பில் பொய்யான அல்லது பிறழ்வாக இட்டுச் செல்கின்ற கூற்றொன்றைச் செய்தல் அல்லது செய்யப்பட்ட ஏதேனும் கூற்றைப் பொய்யற்றதாக்குவதற்கு அல்லது பிறழ்வாக இட்டுச் செல்லாமலிருப்பதற்கு அவசியமான முக்கிய நிகழ்வொன்றைக் கூறுதவிடுதல்,

ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"உரிமம் பெற்ற பங்குத்தொகுதித் தாரகர்களும் உரிமம் பெற்ற பங்குத்தொகுதி வியாபாரிகளும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் வியாபாரஞ் செய்தல் அல்லது வேறு வகையில் அவற்றைக் கையாளுதல்.

**29.** உரிமம்பெற்ற பங்குத் தொகுதித் தாரகர் அல்லது உரிமம்பெற்ற பங்குத் தொகுதி வியாபாரி எவரும்—

(அ) ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி, அவர் எந்த உரிமம்பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்த உரிமம்பெற்ற பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு வெளியே நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் வியாபாரம் செய்தல் அல்லது வேறு வகையில் கையாளுதல் ;

(ஆ) நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் கணக்குத்தீர்வு, கடன்தீர்வு, கொடுப்பனவு, மாற்றம், ஒப்படை என்பன தொடர்பில் ஆணைக்குழு முறைப்படுத்தக்கூடியவாறுள்ள அத்தகைய விதிகளுக்கு முரணாக, நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் வியாபாரம் செய்தல்;

(இ) ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி, அவர் எந்தப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்தப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையால் ஏற்படுத்தப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணான முறையொன்றில் தற்செயல் இழப்பீட்டுக் கணக்கொன்றில் ஏதேனும் கோடுக்கல் வாங்கலைப் பதிதல் ;

(ஈ) ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பிணையங்களின் கொள்வனவை அல்லது விற்பனையைத் தூண்டுவதற்காக அல்லது தூண்ட எத்தனிப்பதற்காக ஏதேனும் சூழ்ச்சித்திறன் சார்ந்த வஞ்சகமான அல்லது வேறு மோசடியான உபாயத்தின் அல்லது தந்திரத்தின் வழியாக ஏதேனும் கொடுக்கல்வாங்கலைப் பயனுறுத்தல்,

ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றாக" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன் மேல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் IIIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

23. பின்வரும் புதிய பாகமானது III ஆம் பாகத்துக்குப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் IIIஅ

கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு உரிமம் வழங்குதல்

கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றினை நடாத்துவதற்கான உரிமமொன்றின் வழங்குகை.

31அ. கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றினை நடாத்துவதற்கு முன்னுகின்ற முகாமைக்கம்பெனியொன்று, அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பை நடாத்துவதற்கான உரிமம் ஒன்று வழங்கப்படுவதற்கென, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

இப்பாகத்தின் கீழ் உரிமம் ஒன்று வழங்கப்படுவதற்கு இணங்கியொழுகப்பட வேண்டிய நியதிகளும் நிபந்தனைகளும்.

31ஆ. கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நடத்துகைக்கு, அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பானது இதற்கான அட்டவணையின் IV ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள நியதிகளுடனும் நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகினாலொழிய, இப்பாகத்தின் கீழ் உரிமம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

உரிமத்தின் வழங்குகை.

31இ. பிரிவு 31அ வின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று கிடைத்ததன்மேல், ஆணைக்குழுவானது, அதில் கூறப்பட்டுள்ள விபரங்களையும்; அத்துடன் அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பப்பட்ட ஆவணங்களையும் கவனத்துக்கெடுத்து; அத்துடன், அது அவசியமெனக் கருதுகின்றவிடத்து, நேரிலோ அல்லது பிரதிநிதியொருவர் மூலமாகவோ தம் திறம் எடுத்துரைப்பதற்கு விண்ணப்பகாரருக்குச் சந்தர்ப்பமொன்று அளித்து, எழுத்திலான அறிவித்தல்மூலம் விண்ணப்பகாரருக்கு உரிமம் ஒன்று வழங்கப்படுகின்றதா இல்லையா என்பதை அறிவித்தல் வேண்டும்.

**கூறு நம்பிக்கைப் பொறுப் பொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதாக்கல்.**

31ஈ. (1) கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்று தொடர்பில் வழங்கப்பட்ட உரிமத்தை, ஆணைக்குழு வானது—

(அ) உரிமம் பெற்ற அக்கூறு நம்பிக்கைப் பொறுப் பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது முகாமைக்கம்பெனி, இச்சட்டத்தின் எவை யேனும் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத் தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதி களை அல்லது ஏதேனும் ஒழுங்கு விதியை மீறி யுள்ளாரென அல்லது மீறியுள்ளதென ; அல் லது

(ஆ) உரிமம் பெற்ற அக் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது முகாமைக் கம்பெனி நல்ல நிதி நிலை யிலிருந்து இல்லாதொழிந்துள்ளாரென அல் லது இல்லாதொழிந்துள்ளது என ; அல்லது

(இ) முகாமைக் கம்பெனியானது, உரிமம் வழங் கப்பட்டதிலிருந்து, அத்தகைய உரிமம் வழங் கப்படுவதற்குத் தகைமை இல்லாதிருந்துள் ளது என; அல்லது

(ஈ) உரிமம் பெற்ற அக் கூறு நம்பிக்கைப் பொறுப் பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது முகாமைக் கம்பெனி அவரது அல்லது அத னது அலுவல்களை முகாமை செய்வதில் முறை கேடான செயலுக்காக அல்லது ஒழுங்கீனத் துக்காகக் குற்றவாளியாக உள்ளார் அல்லது உள்ளது என; அல்லது

(உ) அக் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகா மைக் கம்பெனியானது அந்தக் கூறு நம்பிக் கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பா பாளரினால் கலைக்கப்பட்டுள்ளது என,

திருப்திப்படுமிடத்து, இல்லாதாக்கல் வேண்டும் அல் லது இடைநிறுத்துதல் வேண்டும்.

(2) முற்போந்த உட்பிரிவின் நியதிகளின்படி கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில் வழங்கப் பட்ட உரிமமொன்றை இல்லாதாக்குவதற்கு முன்னர், அத்தகைய உரிமமானது ஏன் இல்லாதாக்கப்படுதலா காது என்பதற்குக் காரணம் காட்டுவதற்கான சந் தர்ப்பமொன்று உரிமம் பெற்றவருக்கு அளிக்கப்படு தல் வேண்டும்.

(3) கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர் பில் வழங்கப்பட்ட உரிமம் இல்லாததாக்கப்படு மிடத்து, ஆணைக்குழுவிடம் அவரது உரிமத்தை உட னடியாக ஒப்படைப்பது உரிமம் பெற்றவரின் கடமை யாதல் வேண்டும்.

(4) கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது முகாமைக் கம்பெனி, (1)ஆம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது (ஆ) அல்லது (இ) அல்லது (ஈ) என்பதிலுள்ள ஏற்பாடுகளை மீறியுள்ளார் அல்லது மீறியுள்ளது எனவும், அத்துடன் அத்தகைய மீறுகையானது பாரதூரமான தன்மை வாய்ந்த தொன்றல்ல எனவும், ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, அது, (1)ஆம் உட்பிரிவின் கீழ் செயலாற்றுவதற்குப் பதிலாக—

(அ) அத்தகைய மீறுகையிலிருந்து எழுகின்ற நிலைமையைச் சரிசெய்வதற்கு அல்லது சீராக்குவதற்கு அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியுடன் அல்லது ஒழுங்கு விதியுடன் இணங்கியொழுகுவதற்கு அல்லது அத்தகைய மீறுகையைத் தொடர்ந்து செய்யாமல் இருப்பதற்கு,

தோதானது என ஆணைக்குழு கருதக்கூடியவாறான எத்தகையதுமான நடவடிக்கையை எடுக்குமாறு அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரை அல்லது முகாமைக் கம்பெனியைப் பணிக்கலாம்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவருக்கு அல்லது முகாமைக் கம்பெனியொன்றுக்குப் பணிப்பொன்று செய்யப்படுதலானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது முகாமைக் கம்பெனிக்கெதிராக வழக்கொன்று தொடுக்கப்படுவதையோ அல்லது பேணப்படுவதையோ பாதித்தலோ அல்லது பங்கப்படுத்துதலோ ஆகாது.

மறுப்பொன்று, இல்லாதாக்கல் அல்லது இடை நிறுத்தல் ஆகியவற்றிலிருந்தான மேன்முறையீடு.

31உ. (1) (அ) பிரிவு 31அ வின் கீழ் உரிமம் ஒன்றை வழங்க மறுக்கின்ற; அல்லது

(ஆ) பிரிவு 31ஈ இன் கீழ் உரிமம் ஒன்றை இல்லாதாக்குகின்ற அல்லது இடைநிறுத்தம் செய்கின்ற,

ஆணைக்குழுவின் முடிபொன்றினால் இன்னலுற்ற ஆளெவரும், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய மறுப்புக்கு, இல்லாதாக்கலுக்கு அல்லது இடைநிறுத்தம் செய்தலுக்கு எதிராக, எத்தேதியன்று முடிபானது அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அவரது திருப்திக்கேற்ப, அதன் முடிபுக்கான காரணத்தைக் காட்டுமாறு ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய மேன்முறையீடு கிடைத்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அவரது முடிவை மேன்முறையீட்டினைச் செய்யும் ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(3) அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிபினால் இன்னலுற்ற விண்ணப்பகாரர் ஒருவர், அத்தகைய முடிபுக்கெதிராக, விண்ணப்பகாரருக்கு அம் முடிபு எத்தேதியன்று அறிவிக்கப்பட்டதோ, அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் 136ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மீளாய்வு என்ற வகையில் செய்யப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் அவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றிற்கும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, இப்பிரிவின்கீழ் அதற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டதன்மேல், அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிவை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிபு படுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் என்பதுடன், நீதியின் நலன்கள் தேவைப்படுத்தக் கூடியவாறான கட்டளை எதனையும் ஆக்கலாம்.

கூறு நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பிலான நம்பிக்கைப் பொறுப்பு உறுதியைத் திருத்துதல்.

31ஊ. (1) உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதி, ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றித் திருத்தப்படுதலாகாது.

(2) உரிமம்பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அத்தகைய கூறு நம்பிக்கை பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியைத் திருத்துவதற்கு உத்தேசிக்கின்றவிடத்து அவர், உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களை ஆணைக்குழுவுக்கு முன்வைத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, (2) ஆம் உட்பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களைப் பெற்றுக்கொண்டதிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள், நம்பிக்கைப் பொறுப்பு உறுதிக்குச் செய்ய உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் அனுமதிக்கப்

பட்டிருக்கின்றனவா அல்லது அத் திருத்தங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கூறு கின்ற எழுத்திலான அறிவித்தலை, முகாமைக் கம்பெனிக்கும்; அத்துடன் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கும் கொடுத்தல் வேண்டும்.

அத்தகைய திருத்தங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் விடயத்தில், அத்தகைய அனுமதி மறுத்தலுக்கான காரணங்களை ஆணைக்குழுவானது கொடுத்தல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், நம்பிக்கைப் பொறுப்பாளர் அத்தகைய அறிவித்தலுக்கு உடனடியாகப் பயன்கொடுத்தல் வேண்டும்.

31எ. பிரிவு 31அ வின் கீழ் உரிமம் அளிக்கப்பட்ட ஆளொருவர் உரிமமொன்றுக்கான தமது விண்ணப்பத்தில் உள்ள எவையேனும் விபரங்களை மாற்றியமைக்க உத்தேசிக்கின்றவிடத்து, அல்லது 31அ என்னும் பிரிவின்கீழான உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிலையிலிருந்து மாற்றமொன்றுக்கு உள்ளாகுகின்றவிடத்து அல்லது உள்ளாக முன்னுகின்றவிடத்து, அத்தகைய மாற்றியமைத்தலை அல்லது மாற்றத்தைச் செய்வதற்கு முன்னர், ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதுடன் அதன் முன் அனுமதியைப் பெறுவது அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும். கொடுத்துதவப்பட்ட எவையேனும் விபரங்களை மாற்றி அமைத்தல்.

31ஏ. ஆளெவரும், 31ஆ என்னும் பிரிவின் கீழ் கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றை நடாத்துவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, விடயத்துக்கேற்றவாறு, "கூறு நம்பிக்கைப் பொறுப்பு" அல்லது "உரிமம் பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் சொற்களைப் பயன்படுத்துதல் ஆகாது. "கூறு நம்பிக்கைப் பொறுப்பு" அல்லது "உரிமம் பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பு" என்ற சொற்களைப் பயன்படுத்தல் மீதான மட்டுப்பாடு.

கூறு நம்பிக்கைப் பொறுப்பில் முதலீடு களைக் கோருகின்ற விளம்பரங்களை வழங்குவதன் மீதான மட்டுப்பாடு.

31ஐ. ஆளெவரும், உரிமம் பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் கூறுகளில் முதலீடு செய்யுமாறு பொதுமக்களைக் கோருகின்ற (விதிகள் மூலம் ஆணைக் குழுவினால் புறநீக்கம் செய்யப்பட்ட விளம்பரங்கள் தவிர்ந்த) விவரமஞ்சரியொன்றை அல்லது விளம்பரமொன்றை, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய விவரமஞ்சரியின் உள்ளடக்கத்துக்கு அல்லது அத்தகைய விளம்பரத்தின் விடயப்பொருளுக்கு அத்துடன் அது வழங்கப்படுவதற்கு அல்லது வெளியிடப்படுவதற்கு ஆணைக்குழுவின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலொழிய, வழங்குதலோ அல்லது வெளியிடுதலோ ஆகாது.

நம்பிக்கைப் பொறுப்பு மீறுகைகளுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்பு மீதானவரையறை.

31ஒ. (1) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், உரிமம் பெற்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியின் ஏதேனும் செயலிலிருந்து எழுகின்ற நம்பிக்கைப் பொறுப்பு மீறுகை எதற்கும்—

(அ) அத்தகைய செயலானது, அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரின் ஒருப்பாட்டினைப் பெறாமல் செய்யப்பட்டிருந்தால்;

(ஆ) அத்தகைய செயலானது, அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரின் ஒருப்பாட்டினைப் பெற்றதன் பின் செய்யப்பட்டு; அத்துடன், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு நம்பிக்கைப் பொறுப்பு ஆதனம் தொடர்பிலான ஏதேனும் விடயம் தொடர்பில், அத்தகைய முகாமைக் கம்பெனியினால் செய்யப்பட்ட ஏதேனும் எழுத்திலான கூற்றின் அல்லது சமர்ப்பித்தலின் நம்பிக்கைமீது, அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளருக்குப் பிறிதாக அத்தகைய முகாமைக் கம்பெனியினால் பெறப்பட்ட ஏதேனும் உயர் தொழில்சார் ஆலோசனையின் நம்பிக்கைமீது அத்தகைய ஒருப்பாடு கொடுக்கப்பட்டிருந்தால், ஆளாதலாகாது.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் உள்ளதெதுவும், மோசடியாக அல்லது அசட்டை மூலம் புரியப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு மீறுகைக்கு ஆளாவதிலிருந்து, நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவருக்கு விலக்களிப்பதாகக் கருதப்படுதலாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில்-

(அ) "எட்டாம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எட்டாம் ஒன்பதாம் உட்பிரிவுகளின்" என்னும் சொற்களையும், "மனதறியத் தொடர்புகொண்டுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொடர்புகொண்டுள்ள" என்னும் சொற்களையும் முறையே இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "அவர் அறிந்திருக்கின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியாயமான அளவில் அவர் அறிந்திருப்பார் என எதிர்பார்க்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) "மனதறியத் தொடர்புகொண்டுள்ள" என்னும் சொற்களுக்குப்பதிலாகத் "தொடர்பு கொண்டுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "வெளியிடுமாறு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வெளியிடாதிருக்குமாறு" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "அவர் அறிந்திருக்கின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியாயமானளவு அவர் அறிந்திருப்பார் என எதிர்பார்க்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "மனதறியப் பெற்றுக்கொண்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பெற்றுக்கொண்ட அல்லது பெற்றுக்கொண்டதாக நம்புவதற்கு நியாயமான காரணம் இருக்கின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "அறிந்திருப்பாராயின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "அறிந்திருப்பார் என நியாயமாக நம்பக்கூடுமாயின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "அறிந்திருப்பாராயின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "அறிந்திருப்பார் என நியாயமாக நம்பக்கூடுமாயின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் "அறிந்திருப்பாராயின்" , என்னும் சொல்லுக்குப் பதிலாக "அறிந்திருப்பார் என நியாயமாக நம்பக்கூடுமாயின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ·

(5) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

"(5) எட்டாம் ஒன்பதாம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமையத் தனியாள் ஒருவர், (4)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எந்தத் தனியாளுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அந்தத் தனியாளிடமிருந்து (4)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முனைவு சிந்திக்கப்பட்டு வருகின்றது அல்லது இனிமேலும் சிந்திக்கப்படவில்லை என்ற தகவலைப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது பெற்றுக்கொண்டுள்ளதாக நம்புவதற்கு நியாயமான காரணம் உள்ளவிடத்து, தகவலானது அப்பிணையங்களின் விலைகள் தொடர்பில் உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வெளியிடப்படாத தகவல் என முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட தனியாள் அறிந்திருப்பதாக நியாயமாக நம்பக்கூடுமாயின், அவர் அக்கம்பெனியின் நிரற்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்புக்களில் வியாபாரம் செய்தலாகாது".

(6) அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (1)ஆம் உட்பந்தியில் "அவரால் பெறப்பட்டிருந்தவராயின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவரால் பெறப்பட்டிருந்தால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(7) அப்பிரிவின் (9)ஆம் உட்பிரிவில் "நிறைவு செய்வதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நிறைவு செய்வதை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் உட்பந்தியில் "எத்தகவல் உடனடியாக பின்விளைவுகளை ஏற்படுத்தும் வெளியிடப்படாத விலை என்பது அதனை வைத்திருக்கும் தனியாளுக்குத் தெரிந்திருக்கின்றதோ அத்தகவலுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விலையில் உடனடியான பின்விளைவுகளை ஏற்படுத்தும் வெளியிடப்படாத ஏதேனும் தகவலுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) வேறு எவரேனும் ஆளுக்கு, அத்தகைய ஆள் அல்லது வேறு எவரேனும் ஆள், அத்தகைய இயைபான பிணையங்களில் வியாபாரம் செய்யுமாறு வேறெவருக்கும் ஆலோசனை வழங்கும் அல்லது அத்தகைய இயைபான பிணையங்களில் வியாபாரம் செய்வதனை வேறெவரேனுமாளுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துக்கு அத்தகவலைப் பயன்படுத்துவார் என அத்தனியாள் அறிந்திருந்தால் அல்லது அவ்வாறு நம்புவதற்கு நியாயமான கார

ணத்தைக் கொண்டிருந்தால், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ளவாறு அவரால் பெறப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட தகவலைத் தெரிவித்தலாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 35ஆம் பிரிவைத் திருத்துதல்.**

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) பதினுன்காம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான பார்வையிடுதல்களை நடாத்துவதில் உறப்படும் செலவுகளாக அறவிடப்படக்கூடியவாறான அல்லது 15 ஆம் 20 ஆம் அத்துடன் 31ஆம் என்ற பிரிவுகளின்கீழ் கட்டணங்கள் என்ற வகையில் செலுத்தப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;";

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவைத் திருத்துதல்.**

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவு அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

"(2) நட்டஈட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) நிதியத்தின் நோக்கத்திற்கெனப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(ஆ) பிரிவு 51அ என்பதன்கீழ் நிதியத்திற்கு வரவுவைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவைத் திருத்துதல்.**

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "எல்லா நோக்கங்களுக்காகவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின் நோக்கத்திற்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 42ஆம் பிரிவைத் திருத்துதல்.**

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பேரவையுடனான கலந்தாலோசனையுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியகற்றலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியகற்றலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவைத் திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் அத்துடன் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(1) ஆணைக்குழுவானது, பின்வருவனவற்றைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கென மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபிக்கலாம்—

(அ) ஏதேனும் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியின் பங்குதாரர்களினால் அல்லது உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பின் கூறுவைத்திருப்போரினால், உரிமம் பெற்ற பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் அல்லது அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் எவரேனும் பங்குத்தொகுதித் தரகரின் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியின் அல்லது அத்தகைய நிரற்படுத்தப்பட்ட கம்பெனியின் அல்லது அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியின் உயர்தொழில்சார் நடத்தை அல்லது செயற்பாடு தொடர்பிலான முறைப்பாடுகள்;

(ஆ) அத்தகைய பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி எந்த உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பினரொருவராக உள்ளாரோ அந்த உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் உயர்தொழில்சார் நடத்தை அல்லது செயற்பாடுகள் தொடர்பில் எவரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகரினால் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியினால் செய்யப்படும் முறைப்பாடுகள்.

(2) குழுவானது எவரேனும் பங்குதாரரினால், அல்லது கூறு வைத்திருப்போரினால், அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகரினால் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியினால் செய்யப்படும் ஏதேனும் எழுத்திலான முறைப்பாடு கிடைக்கப்பெற்றதன்மேல், அத்தகைய முறைப்பாட்டுக்கு ஆதாரமாக முன்வைக்கப்பட்ட ஆவணங்கள்; அத்துடன் வேறு சான்று, ஏதேனுமிருப்பின், அவற்றைப் பரிசீலனை செய்யலாம் என்பதுடன், விடயத்துக்கேற்றவாறு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி அல்லது நிரற்படுத்தப்பட்ட கம்பெனி அல்லது அத்தகைய கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைக் கம்பெனி, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றையும் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை, அல்லது அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஏதேனும் விதியை மீறியுள்ளதா அல்லது மீறியுள்ளாரா எனத் தீர்மானிக்கலாம். அத்தகைய தீர்மானம் எதுவும், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு, உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு, அல்

லது நிரற்படுத்தப்பட்ட கம்பெனிக்கு அல்லது அத்தகைய முகாமைக் கம்பெனிக்குத் தம் திறம் கூறுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளிக்காது எடுக்கப்படுதலாகாது.

(3) குழுவானது, விடயத்துக்கேற்றவாறு, உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்று, உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரியொருவர் அல்லது நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்று அல்லது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமைக் கம்பெனி, இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியை அல்லது விதியை மீறியுள்ளது அல்லது மீறியுள்ளார் எனத் தீர்மானிக்கின்றவிடத்து, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு, பங்குத்தொகுதித் தரகருக்கு அல்லது வியாபாரிக்கு அல்லது நிரற்படுத்தப்பட்ட கம்பெனிக்கு அல்லது முகாமைக் கம்பெனிக்கு எதிராக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையின் தன்மை பற்றி ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் வேண்டும். ஆணைக் குழுவானது, ஒன்றில் அந்த விதந்துரைகளுக்குப் பயன்கொடுப்பதற்கு தோதான நடவடிக்கைகளை எடுப்பதற்கான, அல்லது கருமத்தை மேலும் புலனாய்வு செய்வதற்காகத் தோதான அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்துவதற்கான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) "ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அல்லது விதியின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) பந்தி (ஆ)வில் "உண்மையற்றதாக அல்லது செம்மையற்றதாக உள்ள ஏதேனும் தகவலை அல்லது அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதும் செம்மையற்றதுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்மையற்றதாக, செம்மையற்றதாக அல்லது தவறாக இட்டுச் செல்லுகின்றதாக உள்ள ஏதேனும் தகவலை அல்லது அவரது அறிவுக்கெட்டியவரை உண்மையற்றதும் செம்மையற்றதும் அல்லது தவறாக இட்டுச் செல்லுகின்றதுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "பேரவையின் அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழுவின் அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் அல்லது ஆணைக்குழுவானது எவ்வாளுடன் 23அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "செய்யப்படாததால் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகக் காணப்படும் ஆள் எவரும், நீதிவானொருவர் முன்னராக சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது நூறு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செய்யப்பட்டிருக்காத தவறொன்றுக்கு இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்படும் ஆளெவரும், நீதவானொருவரினால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு கோடி ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

32. பின்வரும் புதிய பிரிவானது 51 ஆம் பிரிவை உடனெடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்;—

"தவறுகளை இணக்குதல்.

51அ. ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் கீழ் தவறானது புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய தவறுக்கு விதிக்கப்படற்பாலான ஆகக்கூடிய குற்றப்பணத்தின் மூன்றிலொரு பங்கினை விஞ்சாத பணத்தொகையொன்றிற்கு அத்தகைய தவறை இணக்கலாமென்பதுடன், இப்பிரிவின் கீழ்த் தவறொன்றை இணக்குவதில் ஆணைக்குழுவினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் 38 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட நட்டஈட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவினை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "பங்குக் கொடுக்கல் வாங்கல் பற்றித் தரகர்களாலும் வியாபாரிகளாலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பங்குக் கொடுக்கல் வாங்கல் பற்றியும் அத்துடன் உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றில் உள்ள கூறுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் பற்றியும் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித் தரகர்களாலும் பங்குத் தொகுதி வியாபாரிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

"(இ) உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றினாலும், உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதி தரகர் அல்லது வியாபாரியினாலும் அல்லது உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைக் கம்பெனியினாலும் புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள் ஆகியன முறையாகப் பேணிவரப்படுதலும், கணக்காய்வுகள் செய்யப்படுதலும்; அத்துடன் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையும், உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித் தரகர் அல்லது வியாபாரி அல்லது முகாமைக் கம்பெனியும் அவர்களது அலுவல்கள் பற்றி ஆணைக் குழுவுக்குக் கிரமமாக அறிக்கையிடுதலும்,"

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உட்னடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஈ) உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றினாலும், உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதித் தரகராலும் பங்குத் தொகுதி வியாபாரியாலும், உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றின் முகாமைக் கம்பெனியாலும் புத்தகங்கள், பதிவேடுகள் கணக்குகள் என்பன வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதலும் நிதிக் கூற்றைத் தயாரித்தலும்;

(உ) பொறுப்பேற்புகளையும் ஒருங்கிணைவுகளையும், அத்தகைய பொறுப்பேற்பு அல்லது ஒருங்கிணைவானது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிரற்படுத்தப்பட்ட கம்பெனிகளுக்கிடையில் இருக்குமிடத்து அல்லது அத்தகைய பொறுப்பேற்பில் அல்லது ஒருங்கிணைவில் ஈடுபட்டுள்ள திறத்தவர்களுள் ஆகக்குறைந்தது ஒரு திறத்தவராயினும் நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றாயிருக்குமிடத்து, ஒழுங்குபடுத்துதல்;

(ஊ) உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் நம்பிக்கை பொறுப்பு ஒன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாலும் முகாமைக் கம்பெனிகளாலும் பின்பற்றப்பட வேண்டிய நடத்தைக் கோவையொன்று;

(எ) எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப் படுகின்றதோ அக்கருமங்கள்";

(3) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதிற் குறித்துரைக்கப் படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) 'முதலீட்டாளர்' என்னும் வரைவிலக்கணத்திற்கு முன்னர் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

"தொடர்புடைய ஆள்" என்பது கூறு நம்பிக்கைப் பொறுப் பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது முகாமைக் கம்பெனி தொடர்பில்—

(அ) நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனி, அல்லது முகாமைக் கம்பெனி என்பவற்றின் சாதாரண பங்கு மூலதனத்தில் விதித்துரைக்கப்பட்டதொரு சத வீதத்தை அல்லது அதற்கு மேலானதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொண்டுள்ளவரான அல்லது நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியின் அல்லது முகாமைக் கம்பெனியின் மொத்த வாக்குகளில் விதித்துரைக்கப்பட்டதொரு சத வீதத்தை அல்லது அதற்கு மேலானதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரயோகிக்க இயலுமானவரான ஒரு ஆள்;

(ஆ) அதன் சாதாரண மூலதனத்தின் விதித்துரைக்கப் பட்ட நூற்றுவீதம் அல்லது அதற்கு மேலானது நேரடியாகவோ மறைமுகமாகவோ நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியினாலும் முகாமை கம் பெனியினாலும் ஒன்றாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுவதான அல்லது மொத்த வாக்குகளில் விதித்துரைக்கப்பட்ட ஒரு நூற்று வீதத்திலானவை அல்லது அதிலும் கூடுதலானவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியினால் பிரயோகிக்கப் படுகின்றதுமான ஒரு கம்பெனி;

(இ) நம்பிக்கைப் பொறுப்புக் கம்பெனியின், முகாமைக் கம்பெனியின் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனி ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர்,

எனப் பொருளாகும்.

(2) "நிரற்படுத்தப்பட்ட பிணையங்கள்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"முகாமைக் கம்பெனி" என்பது, உரிமமளிக்கப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில், அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் கூறினை வைத்திருப்போர்களின் நன்மைக்காக, அத்தகைய கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளரால் வைத்திருக்கப்படும் ஆதனத்தை முகாமை செய்கின்றதும் கம்பெனிகளின் கூட்டிணைப்புத் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதுமான ஒரு கம்பெனி அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்டதான ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு எனப் பொருளாகும்;

(3) "பிணையங்கள்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பிணையங்கள்" என்பது அதன் கண் அல்லது அது தொடர்பாக (கூறுகளாக அல்லது வேறுவகையாக விவரிக்கப்பட்டிருப்பினுஞ்சரி) ஏதேனும் உரிமைகள், விருப்பத் தெரிவுகள் அல்லது அக்கறைகள் உட்பட கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி ஏதேனும் குழுவினால் அல்லது ஏதேனும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட உத்தேசிக்கப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள், பங்குத் தொகுதிகள், பங்குகள், நிதிகள், முறிகள் அல்லது பத்திரங்கள் அல்லது பிணையங்கள் எனப் பொதுவாக அறியப்படும் வேறேதேனும் சாதனங்கள் என்று பொருளாகும்; ஆனால் நாணயமாற்று உண்டியல்கள் அல்லது வாக்குறுதிப் பத்திரங்கள் அல்லது வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களை உள்ளடக்காது;

(4) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களைச் சேர்ப்பதன் மூலமும்:—

"நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்பது, உரிமமளிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில், அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கும் சாதனத்தில் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவரான ஆள் என்று பொருளாகும்;

"கூறினை வைத்திருப்போர்" என்பது, கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்று தொடர்பில், அத்தகைய கூறு நம்பிக்கைப் பொறுப்பின் கீழ்க் கூறுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவராக நம்பிக்கைப் பொறுப்பினால் அப்போதைக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளவரான ஆள் என்று பொருளாகும்;

" கூறு நம்பிக்கைப் பொறுப்பு " என்பது பிணையங்களை அல்லது அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உரித்தாக்கப்பட்ட வேறேதேனும் ஆதனத்தைக் கொள்ளுவதில் இருந்து, வைத்திருப்பதிலிருந்து, முகாமை செய்வதிலிருந்து அல்லது விற்றுத் தீர்ப்பதிலிருந்து எழும் இலாபங்களில் அல்லது வருமானத்திலும் மூலதன வருவாய்களிலும் நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் நன்மைபெறுபவர்கள் என்ற வகையில் ஆட்கள் பங்கு பற்றும் நோக்கத்துக்காகச் செய்யப்பட்ட அல்லது ஆட்கள் பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்யும் பயனுடைய ஏதேனும் உடன்பாட்டொழுங்கு என்று பொருளாகும்.

**முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்**

35. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை, அவ் அட்டவணையின் I ஆம் பாகத்தில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பாகத்தின் (எ) என்னும் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:—

" (எ) விண்ணப்பகாரக் கம்பெனியின் பணிப்பாளர் சபையானது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களுள், ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் தனிப்பட்ட பங்குத் தொகுதி தாகர்களிலிருந்து அல்லது பங்குத் தொகுதி வியாபாரிகளிலிருந்து பொது உறுப்பாண்மையால் தெரிவு செய்யப்பட்டவர்களாகவும்; அத்துடன் நான்கு உறுப்பினர்களுக்கு குறையாத உறுப்பினர்கள் ஆணைக்குழுவினால் விதிந்துரைக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.";

(2) (ஐ) என்னும் விடயத்தில் "திருப்திகரமானதாகவுள்ளது; அத்துடன் ", என்னும் சொற்களுக்குப் பதிலாக " திருப்திகரமானதாகவுள்ளது," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) (ஒ) (ii) என்னும் விடயத்தில் " ஆட்களை " என்னும் சொல்லுக்குப் பதிலாக " ஆட்களை " என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(4) (ஒ) (viii) என்னும் விடயத்தில் " தகவல் கொடுக்கப்பட்ட முதலீட்டு " என்னும் சொற்களுக்குப் பதிலாக " தகவல் கொடுக்கப்பட்ட முதலீடுகளின் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) (ஒ) (ix) என்னும் விடயத்தில் "துர்ப்பிரயோகம் செய்யப்படுதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "துர்ப்பிரயோகம் செய்யப்படுதல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) (ஒ) (xi) என்னும் விடயத்தில் "புலனாய்வு செய்தலும் உறுப்பினர்கள்மீது எதிர்பாராக் கண்காணிப்புக்களைச் செய்தலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "புலனாய்வு செய்தலும், அத்துடன் உறுப்பினர்கள்மீது எதிர்பாராக் கண்காணிப்புக்களைச் செய்தலும்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்;

(7) (ஓ) (xiii) அத்துடன் (xiv) என்னும் விடயங்களுக்குப் பதிலாக பின்வரும் விடயங்களை இடுவதன் மூலமும்:—

(xiii) பங்குத் தொகுதித் தரகர்களினதும் பங்குத் தொகுதி வியாபாரிகளினதும் பிணையங்கள் விற்பனை நடாத்துதல் தொடர்பிலும்; அத்துடன் அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான தகவல் பேணப்படவேண்டிய முறை தொடர்பிலும்;

(xiv) வாடிக்கையாளர்களின் நிதிகளும் பிணையங்களும் தரகர்களினதும் வியாபாரிகளினதும் ஏனைய தொழில்களிலிருந்து தனிவேறாக வைத்திருக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்; அத்துடன்";

(8) அப்பாகத்தின் (ஓ) (xiv) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்—

"(xv) அதன் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதித் தரகரெவரேனுமுடனோ அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதி வியாபாரியெவரேனுமுடனோ தொடர்பில்லாதவர்களாகவிருக்கின்ற ஒழுக்காற்றுக்குழுவொன்றை நியமித்தல்;";

(9) அப்பாகத்தின் (ஓ) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்—

"(ஔ) விண்ணப்பகாரக் கம்பெனியின் அமைப்பு அக விதிகள் பணிப்பாளர் சபையின் எல்லா உறுப்பினர்களினதும் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்கின் மூலம் மாத்திரமே பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் முகாமைத்துவ அலுவலர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை முறையை ஏற்பாடுசெய்தல்.";

(10) அட்டவணையின் இறுதியில் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும் அது அட்டவணையின் பாகம் IV எனப் பயனுடையதாதல் வேண்டும்—

"பாகம்" IV

ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்பைத் தொழிற்படுத்துவதற்கான உரிமம் ஒன்று வழங்கும் நோக்கத்திற்கு இணங்கியொழுகப்பட வேண்டிய நியதி நிபந்தனைகள் பின்வருவனவாகும்:—

(அ) விண்ணப்பம் எந்தக் கூறு நம்பிக்கை தொடர்பில் செய்யப்பட்டுள்ளதோ அந்தக் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளரும் முகாமைசெய்யும் கம்பெனியும் வேறான ஆட்களாக இருத்தல்;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பாளர் முகாமைசெய்யும் கம்பெனிக்குத் தொடர்புடைய ஓர் ஆளாக இல்லாதிருத்தல்;

(இ) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கும் நம்பிக்கை உறுதி அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கும் முகாமைக் கம்பெனிக்கும் இடையிலான உடன்படிக்கை பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்தல்—

(i) நம்பிக்கைப் பொறுப்பு ஆதனத்தை முதலீடு செய்வதன் மீது மட்டுப்பாடுகளைத்தருதல்;

(ii) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் தரப்பட்டவாறுன, சந்தர்ப்பங்கள் ஏதேனும் இருப்பின் அச்சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த சந்தர்ப்பங்களில், ஏதேனும் மேலதிகக் கொடுப்பனவைச் செய்யுமாறு அல்லது ஏதேனும் மேலதிகப் பொறுப்பை ஏற்குமாறு கூறுவைத்திருப்பவர்களைத் தேவைப்படுத்துதலாகாதென ஏற்பாடுசெய்யப்பட்டிருத்தல்;

(iii) கூறுகளின் முனைவு விலைகளையும் மீட்புவிலைகளையும் கணிப்பதற்கான முறையைத் தருதல்;

(iv) கூறுகளின் மீட்பு எச்சூழ்நிலைகளில் இடைநிறுத்தி வைக்கப்படலாமோ அச்சூழ்நிலைகளைத்தருதல்;

(v) கூறுவைத்திருப்பவர்களின் இடாப்பொன்றைப் பேணுவதற்கு ஏற்பாடுசெய்தல்;

(vi) நம்பிக்கைப் பொறுப்பாளரை, முகாமைக் கம்பெனியை அத்துடன் அவர்களுடன் தொடர்புடைய ஆட்களை, அவர்கள் முக்கிய அக்கறையொன்றைக்கொண்டுள்ள ஏதேனும் அலுவலானது நம்பிக்கைப்பொறுப்பின் ஏதேனும் கூட்டத்தில் விவாதிக்கப்படும்போதெல்லாம், அவர்களின் அக்கறையை வெளிப்படுத்துமாறு தேவைப்படுத்துகின்ற ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல்;

(vii) ஆணைக்குழுவின் விதிகளினுல் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைக்கொண்ட ஆட்களைக் கூறு நம்பிக்கைப் பொறுப்பின் கணக்காய்வாளர்களாக நியமனம் செய்வதற்கு ஏற்பாடுசெய்தல்: அத்துடன் அத்தகைய தகைமைகளை அவர்கள் கொண்டிராதபோது அத்தகைய கணக்காய்வாளர்களின் ஓய்வுபெறுதலைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தினை ஆணைக்குழுவிற்கு அளித்தல்;

(viii) (தன்னிச்சையான ஒழித்துக்கட்டுதல் தவிர்ந்த) முகாமைக்கம்பெனியின் ஒழித்துக்கட்டுதல்மீது அல்லது முகாமைக்கம்பெனியின் ஏதேனும் சொத்துக்கள் தொடர்பாகப் பெறுநர் ஒருவர் நியமிக்கப்படுவதன்மேல் அல்லது கூறுவைத்திருப்பவர்களின் நலனுக்காக முகாமைக் கம்பெனியில் மாற்றமொன்று விரும்பத்தக்கதென நம்பிக்கைப் பொறுப்பாளர் திருப்தியடைவதன்மேல், அல்லது வழங்கப்பட்ட கூறுகளில் ஆகக்குறைந்தது எழுபத்தைந்து நூற்றுவீதத்தை வைத்திருப்பவர்கள் முகாமைக் கம்பெனியைக் கலைக்குமாறு வேண்டுகோள் விடுப்பதன் மேல் முகாமைக் கம்பெனியைக் கலைத்துவிடுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளருக்குத் தத்துவமளித்தல்;

(ix) முகாமைக்கம்பெனி கலைக்கப்படுவதன்மேல் உடனடியாக நம்பிக்கைப்பொறுப்பாளரினால் ஓர் அடுத்துறுபவர் நியமிக்கப்படுவதற்கு ஏற்பாடுசெய்தல்;

(x) புதிய ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர் நியமிக்கப்படும்வரையில் நம்பிக்கைப் பொறுப்பாளரை ஓய்வு பெறுவதிலிருந்து தடுத்தல்;

(xi) நம்பிக்கைப் பொறுப்பாளரினதும் அத்துடன் ஆணைக் குழுவினதும் அங்கீகாரத்துடனல்லாது, நம்பிக்கைப் பொறுப்புச்சார்பாக ஏதேனும் கீழ் வரைவு ஒப்பந்தம் அல்லது துணைக்கீழ் வரைவு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதிலிருந்து முகாமைக்கம்பெனியைத் தடுத்தல்;

(xii) நம்பிக்கைப் பொறுப்பாளரின் சம்மதத்துடனல்லாது, நம்பிக்கைப் பொறுப்பு ஆதனத்திலிருந்து கடன்களைக் கொடுத்தலை அல்லது வழங்குதலைத் தடுத்தல்;

(xiii) முகாமைக்கம்பெனிக்கும் அல்லது முகாமை கம்பனிக்குத் தொடர்புடைய எவரேனும் ஆளுக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்குமிடையிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கு, நம்பிக்கைப் பொறுப்பாளரின் எழுத்திலான அங்கீகாரத்திற்கான ஏற்பாடுசெய்தல்;

(xiv) சட்டத்தினால் முகாமைக்கம்பெனிமீது விதிக்கப்பட்ட ஏதேனும் பொறுப்பிலிருந்து அதற்கு விலக்களிக்காதிருத்தல் அல்லது கூறுவைத்திருப்பவர்களின் செலவில் அத்தகைய பொறுப்பிற்கெதிராக நட்டோத்தரவாதமளிக்காதிருத்தல்;

(xv) புதிதாக உருவாக்கப்பட்ட கூறுகளுக்கெனச் செலுத்தப்பட்ட பிரதிபயன் (முகாமைக்கம்பெனி நிறுத்திவைக்க உரித்துடைய அறவீடுகள் நீங்கலாக) அத்தகைய பிரதிபயன் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் உடனடியாக நம்பிக்கைப்பொறுப்புக்கு அமைந்ததாதல் வேண்டுமென ஏற்பாடு செய்தல்;

(xvi) முகாமைக் கம்பெனியால் (நிறுத்தி வைக்கப்படக்கூடியதான எவையேனும் விதிப்புகள் நீங்கலாக) அத்தகைய கூறுகளுக்குச் செலுத்தப்பட்ட பிரதிபயன்கள் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன அல்லது உரித்தாக்கப்படுகின்றன என நம்பிக்கைப் பொறுப்பாளர் திருப்தியுறுவதன்மேல் மட்டுமே கூறுகள் தொடர்பிலான ஒரு சான்றிதழ் மூன்றும் திறத்தவர் ஒருவருக்குக் கொடுபடல் வேண்டுமென ஏற்பாடு செய்தல்;

(xvii) ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பு ஆதனமானது, நம்பிக்கைப் பொறுப்பினால் பெறப்பட்ட ஒரு கடனுக்குப் பிணைப் பொறுப்பாக கடன் கொடுப்பவரொருவரின் பெயரில் பதியப்பட்டிருந்தால், அத்தகைய சொத்து தொடர்பாகக் கடன் கொடுப்பவரால் அல்லது அவரது முகவரால் செய்யப்படும் ஏதேனும் செயலுக்கு அல்லது செய்யாமல் விடுகைக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் பொறுப்பாளி ஆதல் வேண்டுமென ஏற்பாடு செய்தல்;

(xviii) ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அல்லாமல் புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரின் நியமனத்தைத் தடைசெய்தல்;

(xix) அனுமதிக்கப்பட்ட கூறுகளில் ஆகக் குறைந்த ஆரம்ப மூலதனத்தைக் குறித்துரைத்தல்;

(xx) கூறுகளின் கொள்வனவின் மேல் அறவிடக்கூடிய ஆகக் கூடிய ஆரம்ப விதிப்பைக் குறித்துரைத்தல்;

(xxi) ஆணைக்குழுவானது தேவைப்படுகின்றவிடத்து, நம்பிக்கைப் பொறுப்பாளரின் கெட்ட நடத்தையால் அல்லது அசட்டையால் எழக்கூடிய நட்டத்திற்கு எதிராக உத்தரவாதம் செய்யும் பிணைப்பொறுப்பு நம்பிக்கைப் பொறுப்பாளரினால் வைப்புச் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்தல்.".

பேணல்கள். 36. ஐயப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:—

(அ) இச்சட்டம் தொடங்கிய தேதிக்கு நேர்முந்திய தேதியன்று பதவி வகித்த பிணையங்கள் பேரவையின் உறுப்பினர்கள் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் அத்தேதியில் பதவி வகிக்கும் அத்தகைய பிணையங்கள் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள்—

(i) அமைச்சரால் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள், 4ஆம் பிரிவிலுள்ள எதனையும் கருத்தில்கொள்ளாது அவர்கள் பிணையங்கள் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) அமைச்சரால் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள், 4ஆம் பிரிவிலுள்ள எதனையும் கருத்தில் கொள்ளாது அவர்கள் பிணையங்கள் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(ஆ) பிணையங்கள் பேரவையால் எவரேனும் பங்குத் தொகுதித் தரகருக்கு அல்லது பங்குத்தொகுதி வியாபாரிக்கு வழங்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று வலுவிலுள்ளதுமான ஒவ்வோர் உரிமமும் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ஓர் உரிமமெனக் கருதப்படல் வேண்டும்;

(இ) பிணையங்கள் பேரவையால் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று வலுவிலிருந்தவையுமாகிய எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் எனக் கருதப்படல் வேண்டும்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று உள்ளதான பிணையங்கள் பேரவையின் எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் அத்துடன் பிறசாதனங்களும் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது பிறசாதனங்கள் எனக் கருதப்படல் வேண்டும்;

(உ) பிணையங்கள் பேரவையால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லாத் தொடர்ச்சிகளும், வழக்குகளும்; அத்துடன் பிற சட்ட நடவடிக்கைகளும் இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்ட தொடர்ச்சிகள் வழக்குகள்; அத்துடன் பிற சட்ட நடவடிக்கைகள் எனக் கருதப்படல் வேண்டும்.

**ஒரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட உரிமம் ஒன்று தொடர்பில் சட்டத்தின் ஏற்புடைமை.**

37. ஒரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர் முந்திய தேதியன்று வலுவிலுள்ளதுமான ஓர் உரிமம் முதன்மைச் சட்டவாக்கத்தில் முரணாயிருப்பது எதனையும் கவனத்தில் கொள்ளாது, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்கள் முடிவடைந்ததன் பின்னர் முடிவடைந்துவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

38. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும், சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.